# வீட்டு வன்முறைச் சம்பவங்களைக் கையாளும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான நியமச் செயற்பாட்டுச் செயன்முறை

Centre for Equality and Justice

# வீட்டு வன்முறைச் சம்பவங்களைக் கையாளும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான நியமச் செயற்பாட்டுச் செயன்முறை

சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம

ஏப்ரல் 2025

# உள்ளடக்கங்கள்


| | |
|---|---|
| சுருக்கப்பதங்கள் | 03 |
| நன்றி | 04 |
| இலங்கையில் வீட்டு வன்முறை பற்றிய அறிமுகம் | 04 |
| நியமச் செயற்பாட்டுச் செயன்முறையின் நோக்கமும் பரப்பெல்லையும் | 06 |
| முக்கிய பதங்களின் வரைவிலக்கணம் மற்றும் விளக்கங்கள் | 09 |
| வழிகாட்டல் கோட்பாடுகள் | 11 |
| அறிக்கையிடல் மற்றும் பரிந்துரைத்தல் முறைமை | 18 |
| பரிந்துரைத்தல் வழிமுறை | 20 |
| ஆவணப்படுத்துதல் மற்றும் தகவல்களைப் பகிர்தல் | 25 |
| கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் கற்றல் | 26 |
| அரச மற்றும் அரச சார்பற்ற சேவை வழங்குநர்களின் ஒருங்கிணைப்பு | 26 |
| சுய பராமரிப்பு : உங்களை கவனித்துகொள்ளுங்கள் | 27 |

# சுருக்கப்பதங்கள்

| | |
|---|---|
| CAT | சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தை அல்லது தண்டனைக்கு எதிரான உடன்படிக்கை |
| CEDAW | பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச சமவாயம் |
| CRC | சிறுவர் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை |
| DV | வீட்டு வன்முறை |
| ICCPR | குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் |
| ICESCR | பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் |
| IPV | நெருக்கமான துணைவர்களால் ஏற்படும் வன்முறை |
| SGBV | பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை |
| SOP | நியம செயற்பாட்டுச் செயல்முறை |
| VAW | பெண்களுக்கு எதிரான வன்முறை |

# நுன்றீ தேுருீவீப்பு

இந்த ஆவணம் ஐக்கிய நாடுகள் பெண்கள் நிறுவனத்தினால் 2021 ஆம் ஆண்டு தொகுக்கப்பட்ட புலம்பெயர் பெண் தொழிலாளர்கள் உள்ளடங்கலாக பெண்களுக்கு எதிரான வன்முறைக்கான ஒன்றிணைந்த துலங்கல் தொடர்பான நியம செயற்பாட்டுச் செயன்முறைகளை விருத்திசெய்தல் - ஒரு பிரயோக வழிகாட்டல் எனும் ஆவணத்தின் வழிகாட்டலுடன் தயாரிக்கப்பட்டதாகும்.

# இலங்கையில் வீட்டு வன்முறை பற்றிய அறிமுகம்

இலங்கை உயர் மனித அபிவிருத்திக் குறிகாட்டிகளைக்[1] கொண்டிருந்தாலும், அதன் பால்நிலை தரப்படுத்தல் நிலைகள் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளன.[2] இந்த வேறுபாட்டிற்கு பல காரணிகள் வழிகோலியுள்ளன. அந்தவகையில் அரசியல் மற்றும் தலைமைத்துவம் போன்ற தீர்மானமெடுத்தல் மட்டங்களில் நிலவும் சமமின்மைகள், தொழிலாளர் படையில் பெண்களின் குறைவான பங்கேற்பு, மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள் (SGBV) போன்ற காரணங்களை குறிப்பிட்டு கூற முடியும்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறை என்பது ஒரு அடிப்படை மனித உரிமை மீறலாகும். மேலும், அது பெண்கள், சிறுமிகள், ஆண்கள், சிறுவர்கள் மற்றும் மாற்றுப் பாலினத்தவர்கள் ஆகியோருடன் தொடர்புடைய பாரபட்சமான, சமத்துவமற்ற மற்றும் நியாயமற்ற சித்தாந்தங்கள் மற்றும் நடைமுறைகளின் வெளிப்பாடாகும். உலகின் பெரும்பாலான பகுதிகளைப் போலவே, இலங்கையிலும் அனைத்து வகையான பால்நிலை அடிப்படையிலான வன்முறை பரவலாக காணப்படுகின்றது. அத்துடன், ஆண்கள், சிறுவர்கள் மற்றும் மாற்றுப் பாலினத்தவர்கள் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை எதிர்கொண்டாலும், இதனால் பெண்கள் மற்றும் சிறுமிகளே அதிகளவில் பாதிக்கப்படுவதாக அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

---

1. 2023-24 மனித அபிவிருத்தி சுட்டெண்ணில் 189 நாடுகளில் இலங்கை 78 வது இடத்தில் உள்ளது.
2. பாலின சமத்துவமின்மை சுட்டெண் 2023-24 இல் இலங்கை 90 வது இடத்திலும், உலகளாவிய பாலின இடைவெளி சுட்டெண் 2024 இல் 122 வது இடத்திலும் உள்ளது.

பால்நிலை அடிப்படையிலான வன்முறையினால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களின் வாழ்நாள் அனுபவங்கள் குறித்த தேசிய பெண்கள் நல்வாழ்வு ஆய்வின் (2019) கண்டுபிடிப்புகள் கீழே குறிப்பிட்டுள்ள உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ளன

- நான்கு பெண்களில் ஒருவர் (24.9%) 15 வயதிலிருந்து தனது துணையால் அல்லது துணை அல்லாதவர்களால் உடல் மற்றும் / அல்லது பாலியல் ரீதியான வன்முறைக்கு ஆளாகியுள்ளனர்.

- பெண்கள் தங்கள் வாழ்நாளில் இரண்டுக்கு மேற்பட்ட தடவைகள் தமது மிகவும் நெருக்கமான துணைவரால் உடல் மற்றும் / அல்லது பாலியல் வன்முறையை அனுபவித்துள்ளனர்.

- ஒவ்வொரு ஐந்து பெண்களில் இருவர் (39.8%) தங்கள் வாழ்நாளில் ஒரு துணைவரால் உடல், பாலியல், உணர்ச்சி மற்றும் / அல்லது பொருளாதார வன்முறையினால் பாதிக்கப்பட்டுள்ளனர், மற்றும்/ அல்லது கட்டுப்படுத்தும் நடத்தைகளால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர்.

பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்த தரவுகளை சேகரித்த முதலாவது தேசிய கணக்கெடுப்பு குடித்தொகை மற்றும் சுகாதார ஆய்வு (2016) ஆகும். அதில் குடும்ப வன்முறை தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கியமான கண்டுபிடிப்புகள் வருமாறு.

- 15-49 வயதுடைய திருமணமாகாத பெண்களில் 17% பேர் தங்கள் நெருங்கிய உறவுகளின் வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

- வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களில், நான்கில் ஒரு பகுதியினர் (28%) மட்டுமே உதவியை நாடியுள்ளனர்: அவர்களுள் 75% ஆனோர் தங்கள் குடும்ப உறுப்பினர்களின் உதவியையும், 27% ஆனோர் நண்பர்கள் அல்லது அண்டை வீட்டாரின் உதவிகளையும் நாடியுள்ளதோடு, வெறும் 18% மட்டுமே பொலிஸாரின் உதவிகளை கோரியுள்ளனர்.

வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டோருக்கு மற்றும் அல்லது வன்முறையிலிருந்து தப்பிப்பிழைத்தவர்களுக்கான சேவைகள் குறைவாக இருப்பதாலும், அவ்வாறு கிடைக்கக்கூடிய சேவைகளின் தரம் மோசமாக இருப்பதாலும் நிலைமை மேலும் மோசமாகியுள்ளது. பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்கள் வலுவூட்டல்

தொடர்பான தேசிய கொள்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு தீர்வு காண்ப-தற்கான ஆதரவுச் சேவைகள் போதுமானதாக இல்லை என்ப-துடன், அவ்வாறு ஒரு சில சேவைகள் இருந்தாலும் அங்கு கிடைக்கும் வளங்கள் ஒரே மாதிரியானவை அல்ல. அத்துடன், உடனடி நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதற்கான வளங்கள் மற்றும் பயிற்சிகள் இல்லாமையும் இங்கு உள்ளடங்கும்.

# நியமச் செயற்பாட்டுச் செயன்முறையின் நோக்கம் மற்றும் பரப்பெல்லை

இந்நியமச் செயற்பாட்டுச் செயன்முறையின் (SOP) நோக்கம் குடும்ப வன்முறைச் சம்பவங்களை கையாள்வதற்கு, பிரதேச மட்ட பங்குதாரர்களை வலுப்படுத்துவதாகும். மேலும் இச்செயன்முறையில் வீட்டு வன்முறைகளால் பாதிக்கப்பட்டு அல்லது வீட்டு வன்முறையிலிருந்து தப்பித்து தமக்கு ஆதரவு அல்லது ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளும் நோக்கில் பிரதேச செயலகங்களை அணுகும் நபர்களுக்கு தரப்படுத்தப்பட்ட மற்றும் தரமான பராமரிப்பை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு, அவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளையும் அவர்களின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகளும் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

இந்நியமச் செயற்பாட்டுச் செயன்முறை பிரதேச செயலகங்களின் கீழ் பணிபுரிகின்ற கீழே குறிப்பிட்டுள்ள உத்தியோகத்தர்கள் உள்ளடங்-கலாக இத்துறையுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களை இலக்காகக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அவர்களாவன:

1. பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
2. உளவளத்துணை ஆலோசகர்கள்
3. சமூக சேவை உத்தியோகத்தர்கள்
4. மகளிர் மேம்பாட்டு வெளிக்கள உதவியாளர்கள்
5. மாவட்ட உள-சமூக உத்தியோகத்தர்கள்
6. குடும்ப சுகாதார உத்தியோகத்தர்
7. நன்னடத்தைக்கான சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்

8. சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

9. சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்

10. முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பிற தொடர்புடைய அதிகாரிகள்.

இந்நியமச் செயற்பாட்டுச் செயன்முறை நடைமுறையிலுள்ள தேசிய சட்டக் கட்டமைப்புக்களால் வழிநடாத்தப்படும். அவற்றுள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- இலங்கை அரசியலமைப்பின் ஏற்பாடுகள்.[4] "சட்டத்தின் முன் அனைவரும் சமம், சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள் உறுப்புரை 12(1), மற்றும் "எந்தவொரு பிரஜையும் பின்வரும் காரணங்களின் அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படலாகாது... (பாலியல்) உறுப்புரை 12 (2).

- இலங்கை தண்டனைச் சட்டக்கோவை.[5] தகாத உறவு (பிரிவு 364 யு), பாரதூரமான பாலியல் து'பிரயோகம் (பிரிவு 365 B), குழந்தைகளுக்கு எதிரான கொடுமை (பிரிவு 308 A) மற்றும் பாலியல் துன்புறுத்தல் (பிரிவு 345), அத்துடன் பாலியல் பலாத்காரம் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான ஏற்பாடுகள் போன்ற குற்றங்களுக்கான தண்டனைகள்.

- குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் (2005). இது தண்டனைச் சட்டக் கோவையின் அத்தியாயம் XVI இன் கீழ் குற்றங்களை வீட்டு வன்முறையாக வரையறுத்துள்ளதுடன் உணர்வுப்பூர்வமான தொந்தரவு / துஷ்பிரயோகம் ரீதியான துஷ்பிரயோகத்தை வீட்டு வன்முறையின் ஒரு வடிவமாக அங்கீகரிக்கிறது. மேலும், இங்கு நீதிமன்றத்தின் பாதுகாப்புக் கட்டளை அடிப்படையிலான துரித தீர்வுகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

- குற்றத்தினால் பலியானோர் மற்றும் சாட்சிகளை பாதுகாக்கும் சட்டம் (2015), இது குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் குறித்த சர்வதேச தரங்களுக்கு

---

3. பக்கம் 42
4. இது ஏனையவற்றுடன், சமத்துவம், பேச்சு சுதந்திரம், கூட்டம் கூடும் உரிமை, சங்கம் அமைக்கும் உரிமை, நடமாடும் உரிமை மற்றும் சித்திரவதையில் இருந்து சுதந்திரம் மற்றும் சட்டத்தின் முன் சமத்துவம் ஆகியவற்றிற்கு உத்தரவாதம் அளிக்கிறது
5. ஆரம்பத்தில் 1883 இல் குறியிடப்பட்டது, பின்னர் 1995 மற்றும் 1996 ஆம் ஆண்டுகளில் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை நிவர்த்தி செய்வதில் முற்போக்கான மாற்றங்களுடன் திருத்தப்பட்டது.

செயல்வடிவம் அளித்தது. இந்த சட்டம் சமத்துவம், நியாயம், தனியுரிமை, உடனடி மற்றும் நியாயமான நிவாரணம் பெறுதல் மற்றும் தீங்குகளிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான உரிமைகளு-க்கு உத்தரவாதம் அளித்துள்ளதுடன், குறிப்பாக பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் பாதிக்க-ப்பட்டப் பெண்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறது.

- பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்கள் வலுவூட்டல் தொடர்பான தேசிய கொள்கை (2024), இலங்கையில் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு தீர்வு காண்பதற்கான பல்துறை தேசிய செயல் திட்டம் SGBV NAP (2024 - 2028) மற்றும் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகா-ப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர-மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய செயல் திட்டம் (2023 - 2027) உள்ளிட்ட தேசிய கொள்கைகள்.

ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து முக்கிய மனித உரிமைகள் உடன்படிக்கைகளையும் இலங்கை அங்கீகரித்துள்ள-துடன்,[6] அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டிய கடப்பாட்டையும் கொண்டுள்ளது. குறிப்பாக பெண்களின் உரிமைகளை மைய-மாகக் கொண்ட உலகளாவிய திட்டமான ‘பெய்ஜிங்’ நடவடி-க்கைக்கான தளத்தையும் இலங்கை அங்கீகரித்துள்ளது.

இந்நியமச் செயற்பாட்டுச் செயன்முறையானது வீட்டு வன்முறைகளுக்கு அடையாளப்படுத்துவதற்கு தற்போது நடைமுறையிலுள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளுக்கான ஒரு மாற்றீடாக அமைவதில்லை. மாறாக, வீட்டு வன்முறையின் மூலம் பாதிக்கப்பட்ட-வர்களுக்கு தேவைப்படும் சேவைகளை வினைத்திறனுடன் உரிய நேரத்தில் வழங்குவதற்காக அனைவரும் ஒரு ஒருங்கிணைந்த கட்-டமைப்பினுள் பணியாற்றுகின்றனர் என்பது உறுதிப்படுத்தப்படும் என்ற எதிர்பார்ப்புடனேயே இச்செயன்முறை விருத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், வினைத்திறனான பரிந்துரைகளை மேற்கொள்ளும் விதத்-தில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் ஆற்றல்களை விருத்-திசெய்வதிலும் இச்செயன்முறையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

---

6. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை (ICCPR) உட்பட சர்வதேச பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகள் உடன்படிக்கை (International Covenant on Economic, Social and Cultural Rights - ICESCR) சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் (CRC) சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தை அல்லது தண்டனைக்கு எதிரான சமவாயம் (CAT) பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சமவாயம் (CEDAW) ஆகியவையும் இதில் அடங்கும்.

# முக்கிய சொற்பிரயோகங்களுக்கான வரைவிலக்கணம் மற்றும் விளக்கங்கள்

வீட்டு வன்முறை (DV) - ஒரு வீட்டுச் சூழலில் அல்லது அதற்கு வெளியே தொடர்புடைய நபரால் செய்யப்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட எந்தவொரு உடல், வாய்மொழி அல்லது உணர்ச்சி ரீதியான து' பிரயோகம், மற்றும் பாதிக்கப்பட்ட நபருக்கும் தொடர்புடைய நபருக்கும் இடையிலான தனிப்பட்ட உறவின் மூலமாக இழைக்கப்பட்ட அல்லது நிகழ்ந்த உடல், வாய்மொழி அல்லது உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகம். வீட்டு வன்முறை என்பது பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் ஒரு வடிவம் ஆகும். இது நெருக்கமான துணை அல்லது உறவுகளால் நிகழ்த்தப்படும் வன்முறை மற்றும் குடும்ப வன்முறை ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது.

அத்தியாவசியமான சேவைகள் - சுகாதாரப் பாதுகாப்பு, சமூக சேவை, பொலிஸ் மற்றும் நீதித் துறைகளால் வழங்கப்படும் சேவைகளின் முக்கிய தொகுப்பு. சேவைகள் குறைந்தபட்சம் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை அனுபவிக்கும் எந்தவொரு நபரின் உரிமைகள், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வைப் பாதுகாக்க வேண்டும்.

பால்நிலை - பெண்கள் மற்றும் ஆண்கள் தொடர்பாக சமூக ரீதியாகக் கட்டமைக்கப்பட்ட பண்புகளைக் குறிக்கிறது – அதாவது பெண்கள் மற்றும் ஆண்கள் குழுக்களுக்கு இடையிலான உறவுகள். நியமங்கள், வகிபாகங்கள்.

பால்நிலை அடையாளம் - ஒருவரின் பால்நிலை பற்றி அவரின் உணர்வுகள் மற்றும் நம்பிக்கைகள். இது பிறக்கும் போதே அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாலினத்திற்கு சமமாகவோ அல்லது வேறுபட்டதாகவோ இருக்கலாம்.

நெருங்கிய துணைவரினால் ஏற்படும் வன்முறை (IPV) - இங்கு பாலியல் ரீதியான தாக்குதல், உடல் ரீதியான தாக்குதல், மற்றும் தற்போது அல்லது இதற்கு முன்பு காதல் உணர்ச்சிகளை பகிர்ந்துகொள்ளும் நோக்கத்துடன் சந்தித்த நபர், காதலன், கணவர் அல்லது இணைந்து வாழும் துணைவர் ஆகியோரால் அல்லது ஒருவரால் ஏற்படுத்தும் துன்புறுத்தல் என்பன உள்ளடங்குகின்றன. இந்த

வரைவிலக்கணத்தில் ஒரே பாலினத்தவர்கள் மற்றும் எதிர் பாலினத்தவர்கள் ஆகிய இரு திறத்தவர்களும் உள்ளடங்குகின்றனர்.

குற்றவாளி - ஒருவர் மீது அவரின் விருப்பத்திற்கு முரணாக நேரடியாக வன்முறையை திணிக்கும் நபர், குழு அல்லது நிறுவனம்.

பரிந்துரை வழிமுறை/ஆற்றுப்படுத்தல் - இது பாதிக்கப்பட்டோரை - தப்பிப்பிழைத்தவர்களை ஆரோக்கியம், உள சமூக ஆதரவு, நீதி போன்ற பராமரிப்பு மற்றும் உதவியுடன் பாதுகாப்பாகவும் திறம்படவும் இணைக்கும் ஒரு கட்டமைக்கப்பட்ட செயல்முறையாகும்,

பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SGBV) – ஒரு நபரின் பால்நிலையின் அடிப்படையில் உடல், பாலியல், உளவியல் அல்லது பொருளாதார ரீதியாக தீங்கு அல்லது துன்பத்தை விளைவிக்கும் அல்லது விளைவிக்கக்கூடிய எந்தவொரு செயலும் உள்ளடங்கும்.

பங்குதாரர்கள் - குடும்ப வன்முறைகளை அடையாளப்படுத்துவதற்கான வகிபாகத்தினை கொண்டுள்ள அனைத்து அரசு மற்றும் சிவில் சமூக அமைப்புகள். இங்கு பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள், சமூக சேவைகள், சுகாதாரத் துறை, சட்டத் துறை, காவல்துறை, நீதித்துறை, குழந்தைகள் பாதுகாப்பு முகவர் மற்றும் கல்வித் துறை ஆகியவை அடங்கும்.

பெண்களுக்கு எதிரான வன்முறை (VAW) – பெண்களுக்கு உடலியல் ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் அல்லது உளவியல் ரீதியாகவும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய அல்லது அதற்கு காரணமாக இருக்கின்ற எந்தவொரு நடவடிக்கையும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையாகும். இங்கு தனிப்பட்ட வாழ்க்கையில் அல்லது பொது வாழ்வில் ஏற்படுத்தும் அச்சுறுத்தல்கள், வற்புறுத்தல்கள் அல்லது ஒருவரின் சுதந்திரத்தை பறித்தெடுத்தல் என்பன உள்ளடங்குகின்றன.

மேலும், இது பெண் பிள்ளைகள் அல்லது பெண்களுக்கு எதிரான நெருங்கிய துணைவரால் வன்முறை, துணை அல்லாதவரின் பாலியல் வன்முறை, கடத்தல் மற்றும் பெண் பிறப்புறுப்பு சிதைவு போன்ற தீங்கு விளைவிக்கும் நடைமுறைகள் போன்ற பல்வேறு விதத்திலான வன்முறைகளை உள்ளடக்குகின்றது.

பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர் - அதாவது, வன்முறையை

அனுபவித்த ஒரு நபர். “பாதிக்கப்பட்டவர்“ மற்றும் “தப்பிப்பிழைத்தவர்“ என்ற சொற்கள் பெரும்பாலும் ஒன்றுக்கு மாற்றீடாக இன்னொன்று பயன்படுத்தப்படுகின்றன. இங்கே, இரு பதங்களும் வன்முறையை எதிர்கொண்டுள்ளனர் என்பதைக் காட்ட பயன்படுத்தப்படுகின்றன, என்றாலும், தமது வாழ்வில் இன்னும் அவர்களுக்கு கட்டுப்பாடும் பலமும் இருப்பதை சுட்டிக்காட்டுகின்றன.

பெண்களின் வலுவூட்டல் - பெண்கள் தங்கள் வாழ்க்கையின் கட்டுப்பாட்டை உணரவும், தங்கள் எதிர்காலத்தைப் பற்றி முடிவுகளை எடுக்கவும் பெண்களின் வலுவூட்டல் உதவுகின்றது. வலுவூட்டல் என்பது ஆலோசனை வழங்கல் தலையீடுகள் மற்றும் சில உளவியல் தலையீடுகளின் முக்கிய அம்சமாகும்.

# வழிகாட்டல் கோட்பாடுகள்

பால்நிலை அடிப்படையிலான சமமின்மைகள் காரணமாகவே பெரும்பாலும் வன்முறைகள் இடம்பெறுகின்றன என்ற உண்மையை விளங்கி புரிந்துகொள்வதனூடாக வீட்டு வன்முறையினால் பாதிக்கப்பட்டிருக்கும் நபர்களுக்கு உதவவும், அவர்களை பாதுகாக்கவும் முடியும். மேலும், அவர்களுக்கு வழங்கும் ஆதரவு மற்றும் உதவிச் சேவைகளில் மனித உரிமைகள், வலுவூட்டல் போன்ற அம்சங்களில் கவனம் செலுத்துவது போன்று பாதிக்கப்பட்டோரின் தெரிவுகளை முக்கியத்துவப்படுத்துவதும் முக்கியமானது. மேலும், பாதிக்கப்பட்ட மக்களின் தனித்துவமான அனுபவங்கள் மற்றும் சேவைகளை நாடும்போது அவர்கள் எதிர்கொள்ளும் குறிப்பிட்ட தடைகளையும் கருத்திற்கொள்வது அவசியம். வீட்டு வன்முறையில் தப்பிப்பிழைத்தவர்களுக்கு அத்தியாவசிய சேவைகள் வழங்கப்படும்போது பயன்படுத்த வேண்டிய முக்கிய வழிகாட்டல் கொள்கைகள் கீழே உள்ளன.

- உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை: நாட்டு மக்களின் உரிமைகளை மதிப்பதும், பாதுகாப்பதும், பூர்த்திசெய்வதும் அரசாங்கங்களின் முதன்மைப் பொறுப்பாகும். வீட்டு வன்முறையின் மூலம் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. குறிப்பாக பயம் மற்றும் வன்முறை இல்லாத வாழ்க்கைக்கான உரிமை மீறப்படுகின்றது. இது பாதிக்கப்பட்ட-தப்பிப்பிழைத்தவர்களின் பாதுகாப்பு மற்றும்

நல்வாழ்வினை முன்னுரிமைப்படுத்தும் சேவைகளின் அவசியத்தை வலியுறுத்துவதுடன், அவர்களை கண்ணியத்துடனும், மரியாதையாகவும் நடாத்த வேண்டும் என்றும் அவர்களின் உணர்வுகளுக்கு செவிமடுக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு தரமான சேவைகளை வழங்கு வேண்டுமென்றும் வலியுறுத்துகின்றது.

- **பால்நிலை சமத்துவம் மற்றும் வலுவூட்டலை மேம்படுத்துதல் :** பால்நிலை சமத்துவமின்மை மற்றும் பாரபட்சம் காட்டல் என்பன பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் குறிப்பாக வீட்டு வன்முறையின் மூல காரணமாக இருப்பது போன்று அதன் விளைவுகளும் ஆகும். மேலும், குடும்ப வன்முறை மன்னிக்கப்படாத ஒரு குற்றம் என்றும், அவ்விடயத்தில் விட்டுக்கொடுப்புக்கள் இல்லை என்றும் அல்லது அது தொடர்ந்து இடம்பெறுவதற்கு கால அவகாசம் வழங்கப்படாது என்பதையும் உறுதி செய்தல் வேண்டும். அத்துடன், அத்தியாவசிய சேவைகளை மறுக்கும் முடிவுகள் உட்பட, பாதிக்கப்பட்ட-தப்பிப்பிழைத்தவர்கள் தங்கள் சொந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களை ஊக்குவிக்க வேண்டும்.

- **பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவரை மையமாகக் கொண்டது :** இது பாதிக்கப்பட்டோர் -தப்பிப்பிழைத்தவர்களின் உரிமைகள், தேவைகள் மற்றும் விருப்பங்களை சேவை வழங்கலின் மையத்தில் வைக்கிறது. இங்கு பாதிக்கப்பட்டோர் - தப்பிப்பிழைத்தவர்களின் பல தேவைகள், பல்வேறு ஆபத்துக்கள் மற்றும் ஏதுநிலைகள், எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் செயல்களின் தாக்கம் என்பன கருத்திற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதும் ஒவ்வொரு நபரின் தனித்துவமான தேவைகளுக்கு ஏற்ப நடவடிக்கைகள் வடிவமைக்கப்பட்டு அவர்களின் விருப்பங்களுக்கு பதிலளிப்பதை உறுதி செய்வதும் அவசியம். எடுத்துக்காட்டாக, சேவைகளுக்கு ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு பொலிஸ் அல்லது நீதித்துறை அதிகாரிகளுக்கு ஏதேனும் கட்டாய அறிக்கையிடல் தேவைகள் குறித்து அவர்கள் அறிந்திருக்க வேண்டும், இதனால் அவர்கள் எந்தவொரு விளைவுகளையும் புரிந்துகொண்டு தகவலறிந்த முடிவை எடுக்க முடியும்.

☐ **பாதுகாப்பு மிக முக்கியமானது :** அத்தியாவசிய சேவை வழங்-

கலில் வீட்டு வன்முறையினால் பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பு முன்னுரிமைப்படுத்தப்படல் வேண்டுமென்பதோடு அவர்கள் குறித்த சேவைகளைப் பெற்றுக்கொள்கையில், மேலும் அவர்களை காயப்படுத்துவதை தவிர்ப்பது அவசியம். வீட்டு வன்முறையை அனுபவித்து அதிலிருந்து தப்பிப்பிழைத்தவர்களுக்கு இவ்வாறான பாதுகாப்பும் அரவணைப்பும் வழங்குவதென்பது, அவர்கள்

- குற்றமிழைத்த நபர்களின் அக்கம் பக்கத்தில் வாழும்போது முகங்கொடுக்க நேரிடும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாத்தல், குடும்ப உறுப்பினர்கள் அல்லது மற்றவர்களிடமிருந்து எதிர்கொள்ளும் களங்கம் மற்றும் பாரபட்சம் என்பவற்றை ஏற்று அவற்றிற்கு உரிய தீர்வுகளையும் நிவாரணங்களையும் வழங்குதல், மற்றும் வீட்டு வன்முறை சம்பந்தமான சட்டங்கள் மற்றும் கொள்கைகளை விளக்கி தேவைப்படும் போது நீதித்துறையை அணுகும் வழிமுறைகளை விளக்குதல், மற்றும் குற்றமிழைத்தவர்களுக்கு சமூகத்தில் இருக்கும் அந்தஸ்த்தினால் பாதிக்கப்பட்டோர் எதிர்கொள்ளும் ஆபத்துக்களை எதிர்கொள்வதற்கு சிறந்த வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் பெற்றோர் அல்லது அவர்களின் குழந்தைகளுக்கு ஆபத்தை உருவாக்கும் அல்லது அத்தகைய ஆபத்துக்களை நிரந்தரமாக்கக்கூடிய நிலை என்பவற்றை அடையாளங்கண்டு உரிய தீர்வுகளை வழங்குதல் என்பன உள்ளடங்குகின்றன.

- குற்றவாளி பொறுப்புக்கூறல்: பொருத்தமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் குற்றவாளிகளை பொறுப்புக்கூற வைத்தல் அவசியம். நீதிமன்ற முறைமையிலிருந்து நீதியைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பாதிக்கப்பட்டோருக்கு நீதியைப் பெற்றுக்கொள்வதற்காக அர்த்தமுள்ள அணுகலுக்கான ஏற்பாடுகளை செய்வதும், அவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதும் அத்தியாவசியமாக இருக்கும் அதேவேளை, நீதியை தேடுவதற்கான சுமை அல்லது பொறுப்பை அவர்கள் மீது சுமத்தாது, அந்தப் பொறுப்பை அரச தரப்பு உறுதி செய்வது அவசியம். மேலும், பாதிக்கப்பட்டோர்-தப்பிப்பிழைத்த அனைவரும் குற்றவியல் நீதித்துறையின் முன் தோன்றுவதற்கு விரும்பமில்லை. ஆதலால், அவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்கி குற்றவாளிகளை பொறுப்புக்கூற வைப்பதற்கு வேறு வழிமுறைகளை கையாள்வது அவசியம். அந்த வகையில், பாதுகாப்பு கட்டளைப் பொறிமுறைகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் மற்றும்

குற்றவாளிகளின் நம்பிக்கையை மாற்றுவதை இலக்காகக்கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திற்கொள்ள முடியும்.

- இரகசியத்தன்மை மற்றும் தகவலளிக்கப்பட்ட ஒப்புதல்: யாரிடம் தகவல்களை வெளியிட வேண்டும் அல்லது வெளியிடக்கூடாது என்பதைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பாதிக்கப்பட்டவருக்கு உள்ளது. எந்தவொரு தகவலையும் ஏனைய பங்குதாரர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு முன்பு பாதிக்கப்பட்டவர்- தப்பிப்பிழைத்தவரின் தகவலறிந்த ஒப்புதல் பெறப்படல் வேண்டும். தகவலறிந்த ஒப்புதலைப் பெறுவதற்கு ஒரு படிவம் உட்பட ஒரு குறிப்பிட்ட செயல்முறையில் உடன்பட வேண்டும். தரவு சேகரிப்பு மற்றும் பாதுகாப்பு கண்காணிப்பு நோக்கங்களுக்காக பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர்களின் பெயர் அடையாளமற்ற தரவுகளை வழங்கும் நோக்கத்திற்காக பகிர்வதைப் புரிந்துகொண்டு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

- மரியாதை:எடுக்கப்படும்அனைத்துநடவடிக்கைகளிலும்பாதிக்கப்பட்டோரின்-தப்பிப்பிழைத்தவரின் தேர்வுகள், விருப்பங்கள், உரிமைகள் மற்றும் கண்ணியம் என்பன கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

- பாரபட்சமின்மை: பாதிக்கப்பட்டோர்-தப்பிப்பிழைத்தவர்களின் வயது, பால்நிலை, மதம், தேசியம், இனம், பாலியல் சார்பு அல்லது வேறு எந்த அடையாளத்தையும் கருத்திற்கொள்ளாது அவர்களை அனைவரையும் சமமாக நடாத்த வேண்டும். மேலும், தனிப்பட்ட சூழ்நிலைகள் மற்றும் வாழ்க்கை அனுபவங்களுக்கு பொருத்தமான பதில்களை காண்பித்தல் வேண்டும். அத்துடன், பல வகையான பாகுபாடுகளை எதிர்கொள்பவர்களுக்கு சரியான முறையில் அத்தியாவசிய சேவைகளை வழங்க வேண்டும்.

- சிறுவர்களின் சிறந்த நலன்கள்: பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர் ஒரு சிறுவராக (18 வயதிற்குட்பட்டவர்) இருக்கும் சந்தர்ப்பத்தில், சிறுவரின் உரிமைகளை கவனத்திற்கொண்டே தீர்மானங்களை மேற்கொள்ளல் வேண்டும். முடிவுகளை எடுக்கும்போது வயது, பால்நிலை, கலாச்சாரப் பின்னணி மற்றும் சிறுவரின் அனுபவங்கள் போன்ற பல காரணிகளைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். மேலும், இக்கோட்பாட்டின் எந்தவொரு வியாக்கியானமும் சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சமவாயம், தேசிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையிலேயே

மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்துடன், சட்டத்துறை மற்றும் சிறுவர் பாதுகாப்பு அம்சங்களில் நிபுணத்துவமுள்ள துறைசார் முன்னோடிகளின் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். இலங்கை சட்டக் கட்டமைப்பின்படி, நீதிமன்றமே ஒரு குழந்தையின்/சிறுவரின் அதியுயர் பாதுகாப்பு கருமபீடமாகும்.

அனைத்து வழிகாட்டல் கொள்கைகளையும் கடைப்பிடிப்பது சாத்தியமில்லை என்பது புரிந்துகொள்ளத்தக்கது, ஆனால் எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் வழிகாட்டும் கோட்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துவது அவசியம். வழிகாட்டும் கோட்பாடுகளை செயல்படுத்த உதவும் சில நடைமுறை குறிப்புகள் பின்வருமாறு:

| வழிகாட்டும் கோட்பாடுகளை செயல்படுத்துவதற்கான நடைமுறை உதவிக்குறிப்புகள் | |
|---|---|
| பாதிக்கப்பட்டவர்-உயிர் பிழைத்தவர் மற்றும் குடும்பத்தின் பாதுகாப்பை எப்போதும் உறுதி செய்தல | • பாதிக்கப்பட்டவர்கள்-தப்பிப்பிழைத்தவர்கள் உடல் ரீதியாகவும் உணர்ச்சி ரீதியாகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அவர்கள் பயப்படலாம் மற்றும் அவர்களின் தனிப்பட்ட பாதுகாப்பிற்கு மீண்டும் உத்தரவாதம் தேவைப்படலாம்<br>• அவர்களுக்கு சமூகத் தலைவர்கள், பொலிஸ், பாதுகாப்பு நிறுவனங்கள் அல்லது பிறரின் உதவியுடன்கூடிய உடனடி பாதுகாப்பு தேவைப்படலாம்<br>• மீண்டும் மீண்டும் வன்முறைக்கு இலக்காக்கும் ஆபத்தை குறைக்க உதவும் பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்குவதில் அவர்களுக்கு உதவி தேவைப்படலாம்<br>• குடும்பம் மற்றும் / அல்லது ஆதரவு வலையமைப்புக்களிலிருந்து பிரிக்கப்பட்ட குடும்ப வன்முறையின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு, தங்களுக்கும் தங்கள் குழந்தைகளுக்கும் பாதுகாப்பான, இலவசமான தங்குமிட வசதிகள் உடனடியாக தேவைப்படலாம், ஏனெனில் குற்றமிழைத்தவர் அவர்களின் சமூகத்தின் அல்லது வேலைத்தளத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம் |

| | |
|---|---|
| | • தங்கள் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் குழந்தைகளின் காவலைப் பராமரிப்பதற்கான விருப்பத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். |
| பாதிக்கப்பட்ட நபர்(கள்) மற்றும் அவர்களது குடும்பத்தினரின் தனியுரிமை மற்றும் இரகசியத்தன்மைக்கு எப்போதும் மதிப்பளித்தல் | • தனிப்பட்ட இடங்களில் அல்லது அமைப்புகளில் நேர்காணல்களை நடாத்துதல்.<br><br>• பாதிக்கப்பட்ட- தப்பிப்பிழைத்த பெண்களுடன் நேர்காணல்களை நடாத்தும் போது எப்போதும் பெண் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துதல். இங்கு பெண்களுக்கு எதிரான வன்முறை அல்லது வீட்டு வன்முறை வழக்குகளில் தேர்ச்சி பெற்ற உரைபெயர்ப்பாளர்களை ஈடுபடுத்துவது மிகவும் பொருத்தமானது.<br><br>• பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர் பற்றிய தகவல்களை அவர்கள் தகவலறிந்த மற்றும் குறிப்பிட்ட ஒப்புதலை வழங்கினால் மட்டுமே பகிர முடியும். பாதிக்கப்பட்டவர்கள்-தப்பிப்பிழைத்தவர்கள் தாங்கள் எதை ரகசியமாக வைத்திருக்க விரும்புகிறார்கள் என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும்<br><br>• அவர்கள் ஒப்புதல் அளித்தால், சேவைகளுக்கான பரிந்துரைகள் போன்ற பாதிக்கப்பட்டவருக்கு உதவும் நோக்கத்திற்காக பொருத்தமான தகவல்களை மட்டுமே மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர் வீடு திரும்பும்போது அவருடனான தகவல்தொடர்புகளுக்கு இது பொருந்தும்<br><br>• பாதிக்கப்பட்டவர்கள்-தப்பிப்பிழைத்தவர்கள் பற்றிய அனைத்து எழுதப்பட்ட தகவல்களையும் பாதுகாப்பான, பூட்டப்பட்ட கோப்புகளில் பராமரிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவரின் தேர்வுகள், விருப்பங்கள், உரிமைகள் மற்றும் கண்ணியத்திற்கு மதிப்பளித்தல் | • பாதிக்கப்பட்ட-உயிர் பிழைத்தவரின் விருப்பங்கள், தேர்வுகள், உரிமைகள் மற்றும் கண்ணியத்திற்கு மதிப்பளித்தல்.<br><br>• அவர்களிடம் மரியாதையாக நடத்தல், அவர்களை விமர்சிப்பதை தவிர்த்தல். அவர்களின் தனிப்பட்ட, குடும்ப, கலாச்சார விடயங்களை அவமதிக்காதிருத்தல் மற்றும் அவற்றை கேலி செய்யாது இருத்தல்<br><br>• பொறுமையாக இருத்தல். பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர் தனது அனுபவத்தைப் பற்றி பேசத் தயாராக இல்லை என்றால் கூடுதல் தகவல்களை கூறுமாறு வற்புறுத்தாதிருத்தல்.<br><br>• பொருத்தமான கேள்விகளை மட்டுமே கேட்டல். (உதாரணமாக, பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவரின் கன்னித்தன்மை பற்றி வினவுவது பொருத்தமற்றது)<br><br>• பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவரிடம் மீண்டும் அதே விடயத்தினை பல நேர்காணல்களினுடாக வினவுவதை தவிர்த்தல்.<br><br>• பாதிக்கப்பட்டவர்-உயிர் பிழைத்தவர் கூறும் விடயங்களை பற்றி கேள்வி கேட்காதிருத்தல். |
| பாதிக்கப்பட்டவர்-உயிர் பிழைத்தவர்களுடனான அனைத்து தொடர்புகளிலும் மற்றும் அனைத்து சேவை ஏற்பாடுகளிலும் பாரபட்சமின்மையை உறுதி செய்தல் | • பால்நிலை, வயது, அடையாளம், கலாச்சாரம், பாலியல் சார்பு, பால்நிலை அடையாளம், இனம் மற்றும் மொழி விருப்பத்தேர்வுகள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அவர்கள் அனைவரையும் அத்தியாவசிய சேவைகளுக்கு பரிந்துரைத்தல்.<br><br>• உடல் ரீதியான தடைகள், தகவல்தொடர்பாடல் தடைகள் மற்றும் ஏனைய தடைகளை நீக்குவது உட்பட அணுகக்கூடிய வடிவத்தில் சேவைகளை வழங்குதல்.<br><br>• பாதிக்கப்பட்டவர்கள்-தப்பிப்பிழைத்தவர்கள் அவர்களுக்கு மிகவும் பரிச்சயமான மொழியில் தொடர்பு கொள்ளும் வகையில் உரைபெயர்ப்பவர்களை நியமித்தல். |

| | |
|---|---|
| | • பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர் அனுபவித்த வன்முறைக்கு அவர்களை குற்றஞ்சாட்டாதிருத்தல்.<br><br>• பாதிக்கப்பட்டவர்கள்-தப்பிப்பிழைத்தவர்களுக்கு சட்ட சேவைகள் மற்றும் நீதி தீர்வுகளுக்கு சமமான அணுகல் இருப்பதை உறுதி செய்தல், மற்றும் குற்றவாளிகள் பொறுப்புக்கூற வேண்டும் என்பதையும் உறுதிப்படுத்துதல்.<br><br>• பாதிக்கப்பட்டவர்கள்-உயிர் பிழைத்தவர்களுக்கு சென்றடைய வசதியான இடங்களில் சேவைகளை வழங்குதல்.<br><br>• அவசர தொலைபேசி இலக்கங்கள் அல்லது பிற தகவல்தொடர்பு முறைகள் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளிலும், சாத்தியமான இடங்களில் ஆங்கிலத்திலும் இருப்பதை உறுதிசெய்தல். |

சேவைகள் வழங்கப்படும் முறையிலேயே அவற்றின் வினைத்திறன் தங்கியுள்ளது என்பதை ஆராய்ச்சி மற்றும் செயன்முறைகள் பரிந்துரைக்கின்றன.

# அறிக்கையிடல் மற்றும் பரிந்துரை முறைமை

பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவருக்கு ஒரு சம்பவத்தை யாருக்கும் வெளிப்படுத்த (அல்லது வெளிப்படுத்தாமல்) இருக்க சுதந்திரமும் உரிமையும் உள்ளது.

பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவருடன் உரையாடும் உத்தியோகத்தர் கிடைக்கக்கூடிய சேவைகள், சேவைகளின் அபாயங்கள் மற்றும் நன்மைகள் பற்றிய தெளிவான மற்றும் முழுமையான தகவல்களை அறிந்திருப்பது அவசியம். அத்துடன், அவர் பாதிக்கப்பட்டவருக்கு இச்செயன்முறை முழுவதிலும் ஒத்துழைப்பதற்கு

தயாராக இருத்தல் வேண்டும். மேலும், குறித்த உத்தியோகத்தருக்கு வீட்டு வன்முறை தொடர்பாக போதிய புரிதல் இல்லாதபட்சத்தில் பொருத்தமான ஒருவரை சிபாரிசு செய்வது அவசியம்.

**கட்டாயமான அறிக்கையிடுதல்** என்பது தனிநபர்கள் அல்லது சுகாதார வழங்குநர்கள் போன்ற நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் ஏதேனுமொரு உண்மையான அல்லது சந்தேகத்திற்குரிய வீட்டு வன்முறைச் சம்பவத்தை அறிக்கையிட வேண்டுமென வலியுறுத்தும் சட்டவாக்கமாகும்.

வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு விடயத்தை முறையிடுவதற்கு அல்லது அறிக்கையிடுவதற்கு பின்பற்ற வேண்டிய தேவைப்பாடுகளை சொல்லிக்கொடுப்பது அவசியம். அப்போது அவர்களுக்கு பொருத்தமான வழிமுறைகளை பின்பற்றும் போது கிடைக்கும் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்களை விளங்கி, அதனடிப்படையில் செயற்படுவது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். அதற்கு பின்வரும் படிகளைப் பின்பற்ற வேண்டும்:

- ஒரு முறைப்பாடு தொடர்பாக அறிக்கையிடுவதற்கு உங்களுக்கு தேவையான விடயங்களை பற்றி பாதிக்கப்பட்டோருக்கு தெரிவிக்க தெரிவிக்க வேண்டும்.

- விளைவுகளை மதிப்பிடுவதற்கும், இந்தத் தகவலின் அடிப்படையில் அவர்கள் உங்களுக்கு தகவல்களை வெளியிட விரும்புகிறார்களா என்பதைத் தீர்மானிக்கவும் அவர்களை அனுமதிக்கவும்.

விளைவுகளைப் பற்றிய முழு புரிதலுடன் அவர்கள் உங்களிடம் அவற்றை வெளிப்படுத்த முடிவு செய்தால், நீங்கள் பின்பற்ற வேண்டிய விடயங்கள் பின்வருமாறு:

- எழுத்து மூலமான ஒப்புதலைப் பெறுதல்.

- உரிய அதிகாரிக்கு தேவையான அறிக்கையைத் தயார்செய்து சமர்ப்பித்தல்.

- அறிக்கையிடப்பட்ட பின்னர் அது தொடர்பாக கண்காணித்தல்.

- முறைப்பாட்டினை அறிக்கையிட்ட பின்னர் புலனாய்வு மற்றும் ஏனைய செயன்முறைகளின் போது பாதிக்கப்பட்ட-உயிர் பிழைத்தவருக்கு

ஆதரவளித்தல், உதவுதல் மற்றும் தகவல்களை வழங்குதல்.

வீட்டு வன்முறையினால் பாதிக்கப்பட்டுத்-தப்பிப்பிழைத்தவர்களை பொருத்தமான, தரமான, பல்துறை சேவைகளுடன் சரியான நேரத்தில், பாதுகாப்பான மற்றும் ரகசியமான முறையில் இணைக்க ஒரு சிறந்த பரிந்துரை அமைப்பு உள்ளது. இது ஒரு கூட்டுறவு கட்டமைப்பாகும், இதன் மூலம் அரசு மற்றும் அரசு சாரா சேவை வழங்குநர்கள் வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவார்கள்.

இதன் அர்த்தம் யாதெனில், சேவை வழங்குநர்கள் கிடைக்கக்கூடிய சேவைகளைப் பற்றி அறிந்திருப்பதுடன், பரிந்துரைகளுக்கான செயல்முறைகளை நிறுவியிருக்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட உதவி தேடும் முறை மற்றும் வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவர்-உயிர் பிழைத்தவருக்கான பரிந்துரை வழிமுறை கீழே விளக்கப்பட்டுள்ளது.

### ஒரு பரிந்துரை அமைப்புக்கு குறைந்தபட்சம் பின்வரும் விடயங்கள் தேவைப்படுகிறன:

- தகுதிவாய்ந்த பல்துறை சேவை வழங்குநர்களின் ஒரு வலையமைப்பு
- ஒவ்வொரு மாவட்டத்திலும் கிடைக்கக்கூடிய சேவை மையங்கள் தொடர்பான விபரங்களடங்கிய ஒரு பட்டியல்
- பாதிக்கப்பட்டோருக்கு-தப்பிப்பிழைத்தவர்களுக்கு உரிய நேரத்தில், பாதுகாப்பான மற்றும் இரகசியமான சேவைகள் கிடைப்பதை ஆதரிக்கும் ஒரு தரப்படுத்தப்பட்ட மற்றும் நிறுவப்பட்ட பரிந்துரை வழிமுறை.

## பரிந்துரை வழிமுறை

வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட-தப்பிப்பிழைத்தவர் பல்வேறு வழிமுறைகளில் உதவி நாடல் முறைமைக்குள் பிரவேசிக்க வேண்டியிருக்கும். அவர்கள் அணுகும் முதல் உத்தியோகத்தர் அவர்களுக்கு உரிய ஆதரவு மற்றும் ஒத்துழைப்பினை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக குறித்த உத்தியோகத்தர் தமது சொந்த திறன்களைப் பற்றி அறிந்திருப்பதும், ஏனைய சேவை வழங்குநர்களின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகளைப் புரிந்துகொள்வதும் முக்கியம்.

இந்த அணுகுமுறையைப் பயன்படுத்தி, வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட-தப்பிப்பிழைத்தவர்களுக்கு அவர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களின்அடிப்படையில்வெவ்வேறுசேவைகளைஅணுகுவதற்கான பரிந்துரை வழிமுறையை அடையாளங்காணக்கூடியதாக இருக்கும்.

வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் அனைவரும் உதவிகளை விரும்புவதில்லை அல்லது அவர்களுக்கு

உதவி தேவைப்படுவதில்லை. என்றாலும், சிலருக்கு, அவசர சுகாதாரப் பராமரிப்பு, தடயவியல் பரிசோதனைகள், உளவியல்-சமூக ஆதரவு மற்றும் பாதுகாப்பான தங்குமிடம், பொருளாதார ஆதரவு மற்றும் பொருள் ஆதரவு போன்ற சேவைகள் பயனளிக்கும்.

பரிந்துரை வழிமுறையில், அவர்களின் உடனடி மற்றும் நீண்ட கால தேவைகள் மற்றும் பதில்களை மதிப்பிடுவது முக்கியம். அதனை கருத்தில் கொள்வதற்கான ஒரு மாதிரி பரிந்துரை பின்வருமாறு. இது ஒரு சுருக்கமான வழிமுறை ஆகும். மேலும் சேவை வழங்குநர்களின் பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

பரிந்துரை வழிமுறையில் உள்ள முக்கிய படிமுறைகள் பின்வருமாறு:

- **வீட்டு வன்முறையை வெளிப்படுத்துதல்:** பரிந்துரை வழிமுறையின் முதலாவது படிமுறை யாதெனில், பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர், தாம் அனுபவித்த வீட்டு வன்முறையினை ஒருவரிடம் கூறி உதவி கோருவதாகும். இது ஒரு குடும்ப உறுப்பினரினூடாக, ஒரு நண்பர் மூலம், ஒரு சிவில் சமூக அமைப்பு அல்லது பிரதேச செயலக உத்தியோகத்தரிடம் அவர்களை பரிந்துரைக்கும் ஒரு அரச நிறுவனத்தினூடாக இடம்பெறலாம். இதற்கு பாதிக்கப்பட்டவர்-உயிர் பிழைத்தவர் தாங்களாகவே முன்வரலாம்.

- **நெருக்கடி தகவல்கள் மற்றும் உடனடி பதில்கள்:** உத்தியோகத்தர் பாதுகாப்பான, அக்கறையுடன் கூடிய ஒரு சூழலை ஏற்படுத்தி குறித்த விடயம் தொடர்பாக ஆரம்பநிலை மதிப்பீட்டை மேற்கொண்டு உடனடி தேவைகளை அடையாளப்படுத்தி கிடைக்கக்கூடிய சேவைகள், விருப்பத் தேர்வுகள் மற்றும் கட்டாயமான அறிக்கையிடல் பற்றிய தெளிவான தகவல்களை வழங்குகிறார். மேலும், பாதிக்கப்பட்ட-தப்பிப்பிழைத்தவர்களின் விருப்பங்களின் அடிப்படையில் பரிந்துரைகளை முன்வைக்கிறார். ஆரம்பநிலை மதிப்பீட்டில்,

பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவருக்கு தேவைப்படும் உளவியல் சமூக ஆதரவு பற்றிய மதிப்பீட்டினை உள்ளடக்க வேண்டும்.

- பெறப்பட்ட தகவல்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்-உயிர் பிழைத்தவரின் தேவைகளின் அடிப்படையில் ஏனைய உத்தியோகத்தர்களுடன் கலந்தாலோசித்து ஒரு பரிந்துரை திட்டம் வகுக்கப்படும் அவை பின்வருமாறு:

1. அலகுக்குள் உள்ள உள்நாட்டு பரிந்துரைகள் (ஆலோசனை, சிறுவர் பராமரிப்பு மற்றும் சமூக வலுவூட்டல் போன்ற)

2. சுகாதாரத்திற்கான வெளியக பரிந்துரைகள் (மருத்துவமனை, மனநலம், தாதியர், முதலியன), பொலிஸ் மற்றும் நீதித்துறை (சட்ட உதவி, காதி நீதிமன்றம் போன்றவை), சமூக, பொருளாதார மற்றும் கல்வி சேவை வழங்குநர்களுக்கள்.

கவனிக்கப்பட வேண்டிய **முதல் உடனடி தேவைகளுள்** முதன்மையானது ஆரோக்கியம் ஆகும் - **காயங்களைப் பராமரித்தல்** மற்றும் **தடயவியல் பரிசோதனையை** செய்தல் போன்றனவாகும். காயங்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கே முன்னுரிமை வழங்குதல் வேண்டும். பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டிருந்தால், அவர்களை (அவர்களின் ஒப்புதலுடன்) தடயவியல் பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களுக்கு விஷேட கவனிப்பினை பரிந்துரைத்தல் வேண்டும். தடயவியல் பரிசோதனை என்பது தாக்குதலுக்கான உடல் ஆதாரங்களை சேகரிக்கும் ஒரு செயல்முறையாகும். பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர் தடயவியல் பரிசோதனைக்கு உடன்படாத சந்தர்ப்பத்திலும் கர்ப்பம் தரித்தல், எச்.ஐ.வி மற்றும் பிற பாலியல் மூலம் பரவும் நோய்த்தொற்றுகளுக்கு கிடைக்கக்கூடிய தடுப்பு சிகிச்சைகள் குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். முக்கியமாக, இந்த சிகிச்சைகள் துஷ்பிரயோகம் / தாக்குதல் நடந்த 48 முதல் 72 மணி நேரத்திற்குள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும், எனவே கிடைக்கக்கூடிய ஒவ்வொரு சிகிச்சைகளை பற்றி அவர்களுக்கு போதிய விளக்கங்களை வழங்குதல் வேண்டும்.

அதே நேரத்தில், அவர்களுக்கு **உளவியல்-சமூக ஆதரவு மற்றும் மதிப்பீடு மற்றும் உடனடி பாதுகாப்புக்கான திட்டம்** வழங்கப்பட வேண்டும். முதல் வரிசை ஆதரவு மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல் தொடர்பாடல்களை பற்றி உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் வேண்டும். பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவரின் பாதுகாப்பு உடனடி ஆபத்தில் இருந்தால், பொலிஸை அழைத்தல் அல்லது பாதுகாப்பான இடத்திற்குச் செல்வது (குடும்ப உறுப்பினர் அல்லது நண்பரின் குடியிருப்பு அல்லது

தற்காலிக தங்குமிடம்) போன்ற அவர்களின் பாதுகாப்புக்கான திட்டம் பற்றி பரிசீலிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறே, உத்தியோகத்தரும் தனது சொந்த பாதுகாப்பு குறித்தும் கவனம் செலுத்துதல் வேண்டும்.


- **நீண்ட கால திட்டமிடல் மற்றும் பதிலிறுப்புகள்** ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான உடனடி தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன், நீண்ட கால தேவைகள் தொடர்பாக ஒரு மதிப்பீட்டினை நடாத்துவது அவசியம். இந்த மதிப்பீடு பயிற்சி பெற்றவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட வழக்கு முகமைத்துவ செயல்முறையின் அடிப்படையில் இருக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவரின் தேவைகள் மதிப்பிடப்பட வேண்டும். மேலும் அவர்களின் தனிப்பட்ட சூழ்நிலை மற்றும் அவர்களின் தேர்வுகளின் அடிப்படையில் சேவைகள் வழங்கப்பட வேண்டும் அல்லது பரிந்துரைக்கப்பட வேண்டும்.

மதிப்பீட்டிற்கான முக்கிய பகுதிகளாவன, உளவியல்-சமூக ஆதரவு, பாதுகாப்பு, தங்குமிடம், பொருள் ஆதரவு, சட்டத் தகவல்கள் மற்றும் ஆதரவு, பிற உடல்நலப் பராமரிப்பு மற்றும் அவர்களுக்குத் தேவைப்படக்கூடிய வேறு ஏதேனும் சேவைகள்.

ஒரு பரிந்துரை தொடங்கப்படும் போதெல்லாம் அதே அத்தியாவசிய தகவல் வழங்கப்படுவதையும், பரிந்துரையை பூர்த்தி செய்யும் சேவை வழங்குநர்களால் குறித்த தகவல்கள் பெறப்படுவதையும் உறுதி செய்வதற்காக பரிந்துரை சேவை வழங்குநர்களால் ஒரு நியம பரிந்துரை படிவத்தை பயன்படுத்த வேண்டும்.

- **சம்பவத்தை பின்தொடர்தல் மற்றும் முடிவுறுத்தல்:** வழக்கு பரிந்துரை திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட அனைத்து பரிந்துரைகளும் பூர்த்திசெய்யப்பட்ட பிறகு, பரிந்துரை வழிமுறையிலுள்ள சேவை வழங்குநர்கள் தங்கள் சேவைகளை வழங்கிய பிறகு, ஒருங்கிணைப்பு அதிகாரி பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவரை சந்தித்து அவர்களின் அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை அடையாளம் காண்பார். பாதிக்கப்பட்டவர்-உயிர் பிழைத்தவருக்கு கிடைத்த சேவைகள் மூலம் அவர்களின் அனைத்து தேவைகளும் பூர்த்தியாகியிருந்தால், பரிந்துரைகள் நிறைவடைந்ததாக அதிகாரி முடிவு செய்யலாம். இல்லையெனில், பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர் அவர்களுக்குத் தேவையான அனைத்து ஆதரவையும் பெறும் வரை மேலும் பரிந்துரைகள் செய்யப்படுகின்றன.

# பரிந்துரை வழிமுறை



பிரதேச செயலக உத்தியோகத்தர் வீட்டு வன்முறை பற்றிய அறிக்கையை பெற்றுக்கொண்டார்.
அவர்கள் இப்போது பாதுகாப்பாக இருக்கிறார்களா?
ஆம்
இல்லை
அவர்களுக்கு உடனடி மருத்துவ சிகிச்சை அவசியமா?
இல்லை
ஆம்
ஒரு குற்றம் இழைக்கப்பட்டுள்ளதா?
ஆம் / இல்லை
ஆம்
தேவையான பரிந்துரைகள் யாவை?
உடனடி பாதுகாப்பு விருப்பத் தேர்வுகளின் மதிப்பீடு
அவசர சுகாதார சேவைகளை மதிப்பீடு செய்தல்
குற்றச் சாட்டுக்களை பதிவு செய்ய வேண்டுமா இல்லையா என்பதை அவர்களே முடிவு செய்கிறார்கள் (விருப்பங்கள் குறித்த தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது)
சாத்தியமான பரிந்துரை (தேவை மதிப்பீடு, பரிந்துரை மற்றும் பின் தொடர்தல்
உடனடி பாதுகாப்பு, பாதுகாப்பான இடம் மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் அடையாளத்திற்காகவும் பொலிஸில் பரிந்துரைத்தல்
காயங்களுக்கான அவசர சிகிச்சை, தடயவியல் பரிசோதனை (பாலியல் வன்முறை)
வாக்குமூலம், விசாரணை, குற்றவாளியை கைதுசெய்தல், சட்டத்தரணிக்கு பரிந்துரைத்தல்
கண்காணித்தல்
சட்ட ஆதரவு
உள சமூக ஒத்துழைப்பு
பாதுகாப்பான தங்குமிடம்
ஆரோக்கியம்
ஏனையவை
வழக்கு முகாமைத்துவம்
தொடர்ந்து செயல்படுதல் மறுஆய்வு தேவையின் அடிப்படையில் பரிந்துரை செய்தல்

# ஆவணப்படுத்துதல் மற்றும் தகவல்களைப் பகிர்தல்

ஒவ்வொரு உத்தியோகத்தரும் தனக்கு வரும் வீட்டு வன்முறைச் சம்பவங்கள், வழங்கப்பட்ட சேவைகள் மற்றும் சிறந்த சேவை வழங்கல் மற்றும் வழக்கு முகாமைத்துவத்திற்கு வழங்கப்பட்ட பரிந்துரைகளை ஆவணப்படுத்துவது முக்கியமானது. மேலும், பதிலிறுப்பு முறைமையின் தொழிற்பாடுகளை பகுப்பாய்வு செய்வதும் அவசியம். தரவுகளை ஆவணப்படுத்தும் போதும் சேகரிக்கும் போதும் **"தீங்கு ஏற்படுத்தாமை"** என்ற கொள்கைக்கு மதிப்பு வழங்க வேண்டும். இரகசியத்தன்மையை பாதுகாப்பது முதன்மையானதாக இருக்க வேண்டும் என்பதுடன், பாதிக்கப்பட்டவர்-உயிர் பிழைத்தவரின் வெளிப்படையான ஒப்புதல் இல்லாமல் எந்த தகவல்களையும் வெளியே பகிரப்படக்கூடாது அல்லது அடையாளம் காணக்கூடிய அனைத்து தகவல்களையும் நீக்கிவிட வேண்டும்.

ஒவ்வொரு விடய கோப்பிலும் பின்வரும் தகவல்கள் சேர்க்கப்படலாம்:

வன்முறை வகை: உடல், பாலியல், உணர்ச்சி / உளவியல், வாய்மொழி போன்றவை.

வன்முறை நடந்த திகதி

பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர் பற்றிய தகவல்கள்: பால்நிலை, வயது, இனம், மதம், மொழி, தொழில், பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர்-குற்றவாளி உறவு, முகவரி, குழந்தைகளின் விவரங்கள், அவசரகால தொடர்பு நபர் மற்றும் தொடர்பு விவரங்கள் போன்றவை.

குற்றம் செய்தவரைப் பற்றிய தகவல்கள்: வயதுக் குழு (பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவரால் தெரிவிக்கப்பட்டபடி) மற்றும் பால்நிலை (பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர் தெரிவித்தபடி). அதிகாரி குற்றம் செய்தவருடன் தொடர்பு கொண்டிருந்தால், குற்றம் செய்தவரின் உண்மையான வயது மற்றும் பால்நிலை.

பதிவு: வன்முறை பதிவு திகதி, பதிவு செய்யும் நிறுவனம் / நபர்

மற்றும் அவர்களின் பதவி

புவியியல் குறிப்பு: வன்முறை நடந்த இடம் (உதா., நகரம்/கிராமம், மாவட்டம், மாகாணம்)

நிகழ்வின் இடம்: உதா., வீடு, பாடசாலை, வேலைத்தளம், பொது இடம் போன்றவை.

**கணினியைப் பயன்படுத்தி வன்முறை நிகழ்த்தப்பட்டதா என்பதை அடையாளம் காணவும்** (சைபர் கிரைம்)

பதிலிறுப்பு: வழங்கப்பட்ட சேவைகள் (ஆம்/இல்லை/பொருந்தாது/பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர்/நிராகரித்தமை/ பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர் மீண்டும் வர முடிவு செய்தார்), பரிந்துரை (ஆம் /இல்லை/பொருந்தாது/பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர் நிராகரித்தார் /எந்த சேவைகளுக்கு பரிந்துரைக்கப்பட்டது).

## கண்காணித்தலும் மதிப்பீடும்

வழங்கப்படும் சேவைகளின் தரத்தை அவ்வப்போது கண்காணிப்பது அவசியம். இதனை எழுமாறான ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி செய்ய முடியும். அதாவது, பிரதேச செயலகத்தின் உதவியை நாடி வரும் பாதிக்கப்பட்ட-உயிர் பிழைத்தவர்களுக்கு வழங்குவதன் மூலம் அல்லது ஒரு சுயாதீன கண்காணிப்பாளர் மூலம் இதைச் செய்ய முடியும்.

## அரச மற்றும் அரசசார்பற்ற சேவை வழங்குநர்களை ஒருங்கிணைத்தல

வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட-தப்பிப்பிழைத்தவர்களுக்கு கூட்டொத்துழைப்புடன் கூடிய, விரிவான, திறமையான சேவைகளை சரியான நேரத்தில் வழங்குவதற்காக அனைத்து பங்குதாரர்களுக்கிடையில் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புப் பொறிமுறையை நிறுவுவது அவசியம்.

ஒரு ஒருங்கிணைந்த பதிலிறுப்பு முறைமையில் வீட்டு வன்முறையினால் பாதிக்கப்பட்ட-தப்பிப்பிழைத்தவர்களுக்கு

அவர்களின் குறிப்பிட்ட தேவைகளின் அடிப்படையில் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன் பாதிக்கப்பட்டு தப்பிப்பிழைத்தவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு குற்றவாளிகளை தமது குற்றத்தை பொறுப்பேற்க வைக்கிறது.

பிரதேச மட்டத்திலுள்ள சேவை வழங்குநர்களில் பொலிஸ், நீதித்துறை, சுகாதாரம் மற்றும் சமூக பொருளாதாரத் துறைகள் உள்ளடங்குகின்றன.

ஒவ்வொரு பிரிவிலும் சேவை வழங்குநர்களை அடையாளம் காண்பது முக்கியம். இந்த கட்டத்தில் சேவை வழங்குனர் ஒரு முக்கிய கருவியாகும். மேலும், சேவை வழங்குநர்களின் வகிபாகம் மற்றும் பொறுப்புகளை கோடிட்டுக் காட்டுவதற்கு மேலதிகமாக, சேவை வழங்குநர்களை இலகுவில் அணுகவும் ஒருங்கிணைக்கவும் அவர்களின் பெயர், சேவை வகை, இருப்பிடம், தொடர்புத் தகவல் மற்றும் பிற தகவல்களை உள்ளடக்கிய ஒரு சேவை கோவையை உருவாக்க வேண்டும். மேலும், வீட்டு வன்முறை சம்பவங்களின் போது தொடர்புகொள்வதற்கான புள்ளியாக ஒவ்வொரு சேவை வழங்குநரிடமிருந்தும் ஒரு மைய புள்ளியை அடையாளம் காண்பது முக்கியம்.

அவ்வப்போது ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

எந்தவொரு சேவை வழங்குநருக்கும் பாதிக்கப்பட்ட-உயிர் பிழைத்தவரின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது.

## சுய பாதுகாப்பு: உங்களை நீங்களே கவனித்துக்கொள்வது

வீட்டு வன்முறையிலிருந்து தப்பிப்பிழைத்தவர்களுடன் பணிபுரியும் சேவை வழங்குநர்கள் மற்றவர்களுக்கு உதவ உறுதியுடனும் தயாராகவும் இருந்தாலும், துஷ்பிரயோகத்தை விசாரிக்கும் செயற்பாடு அவர்களை எவ்வளவு பாதிக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியாது. எனவே, வன்முறை மற்றும் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுடன் பணிபுரியும் போது

வழங்குநருக்கான சுய கவனிப்பின் முக்கியத்துவத்தை இந்த பகுதி எடுத்துக்காட்டுகிறது. இது சுய பாதுகாப்பு, சக தோழர்களின் ஆதரவினையும் இந்த குடும்பங்களுக்கு ஒரு முழு நடைமுறை அணுகுமுறையை பின்பற்ற வேண்டும் என்றும் ஊக்குவிக்கிறது.

உங்களை நீங்களே கவனித்துக் கொள்ள சில குறிப்புகள் பின்வருமாறு:

- நீங்கள் அதிக மன அழுத்தம் மற்றும் சோர்வுடன் இருக்கும்போது உங்கள் நிலையை புரிந்துகொள்ளல் - எரிச்சலடைதல், களைப்பு, வேலையில் உற்சாகமின்மை ஆகியன இவற்றின் அறிகுறிகளாகும்.

- உங்கள் தொழில் வாழ்க்கையில் உங்களுக்கு ஒத்துழைப்பதற்கு ஒரு வழிகாட்டி, மேற்பார்வையாளர் அல்லது பயிற்சியாளர் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வது அவசியம்.

- உங்கள் பணிக்குழுவுடன் வெளிப்படையான மற்றும் ஒத்துழைப்புடன் கூடிய உரையாடலை விருத்திசெய்துகொள்ளல் வேண்டும்.

- “ஆரோக்கியத்தை“ ஊக்குவிக்கும் வாழ்க்கை முறையை தெரிவுசெய்தல். இதில் உறவுகள், மதம் அல்லது ஆன்மீகம், நேர்மறைக் கண்ணோட்டம், அத்துடன் போதுமான தூக்கம், உடற்பயிற்சி, ஊட்டச்சத்து மற்றும் மகிழ்ச்சி போன்ற எளிய நடவடிக்கைகள் உள்ளடங்கும்.

- பெரிய விடயங்களால் மகிழ்ச்சிப்படுவதை விட சிறிய சாதனைகளைக் கொண்டாட கற்றுக்கொள்ளல் வேண்டும்.

- ஏனைய சிக்கலான மற்றும் நேரத்தைச் செலவழிக்கும் தொழில்களைப் போலவே, வேலைக்கும் குடும்பத்திற்கும் இடையில் தெளிவான எல்லைகளைக் கொண்டிருப்பது முக்கியமாகும்.

Centre for Equality and Justice

37/2, எலிபேங்க் வீதி, கொழும்பு 05
srilanka.cej@gmail.com
0112 055 404